பேராதனை பல்கலைக்கழகம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டுக் நியம இலக்கம் 16 இன் பிரகாரம், பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டதன் பின்னர் பெறுமதி பூச்சியமாக உள்ள சொத்துக்கள் மீண்டும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுமாயின் அச்சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 1,678,403,597 ஆன 07 நிலையான சொத்து உருப்படிகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தி வரும் ரூபா 67,460,656 பெறுமதியான கட்டிடங்கள் மூலனமாக்கப்படாதிருந்ததுடன், அதற்காக ரூபா 3,140,566 பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகம், தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்வி நிலையம் மற்றும் தகவல் தொழிநுட்ப நிலையம் ஆகிய நிறுவனங்களை ஒன்றிணைத்து தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் காணப்பட்ட தொழிற்படு மூலதன விலகலுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த 05 உருப்படிகள் சரியாக காண்பிக்கப்படாமையால் ரூபா 85,700,753 வேறுபாடு அவதானிக்கப்பட்டன.

(இ) பாடநெறி காலத்தைக் கருத்திற் கொள்ளும் போது பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுக்காக எதிர்வரும் ஆண்டுகளுக்காக கிடைத்திருந்த ரூபா 24,169,477 ஆன வருமானம், மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சியிருந்த ரூபா 2,383,265 ஆன இரசாயன மற்றும் எழுதுகருவி இருப்புக்கள் என்பன நிதிக்கூற்றுக்களில் இறுதி இருப்பாக உள்ளடக்காமல் உரிய ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) விவசாய விஞ்ஞான பீடத்தின் விவசாய விற்பனை நிலையத்திற்குரிய ரூபா 1,318,127 ஆன சேமிப்பு வங்கிக் கணக்கு மீதிகளினதும் பொறியியல் திட்டமிடல் நிலையத்தின் ரூபா 813,591 ஆன நிலையான வைப்புக்களினதும் கூட்டுத்தொகையான ரூபா 2,131,718 ஆன வங்கி மீதிகள் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஊ) பல் மருத்துவ பீடத்திற்காக கிடைக்கப் பெற்றிருந்த பெறுமதி மதிப்பிடப்படாத 20 உருப்படிகளுக்குரிய 468 பொருள் அலகுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பல்கலைக்கழகத்தில் செயற்படுத்தப்படும் 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர்கல்வி செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 5,057,352 தொகையும் நூலகம் மற்றும் ஏனைய செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 15,930,379 தொகையும் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் நிரூபணமாகவில்லை.

(ஏ) மருத்துவ பீடத்திற்காக சிகிச்சை ஆய்வுகூட கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அதற்கான செலவுகளை, கிடைக்கும் நிதியங்கள் மூலம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 26,313,723 தொகையை மேற்படி நிதியத்திற்கு செலவு வைக்காமல் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) பல்கலைக்கழகத்திற்கு வதிவற்ற வெளிநாட்டு --- 05 சேமிப்புக் கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதியில் பரிமாற்றம் செய்யப்பட்ட பெறுமதி மாற்றப்படாததன் காரணமாக வெளிநாட்டு நாணய மாற்று பரிமாற்ற அடிப்படையிலான ரூபா 1,196,833 ஆன இலாபம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்றிருந்த தகவல்களின் பிரகாரம் உடன்படிக்கை மீறிய 122 விரிவுரையாளர்களிடமிருந்தும் உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப்படாத 153,137,696 ஆன மீதியொன்று கிடைக்க வேண்டியதாக கருதி கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் வெளிநாடு சென்றுள்ள விரிவுரையாளர்களிடமிருந்தும் உத்தியோகத்தர்களிடமிருந்தும் கிடைக்க வேண்டிய மீதி மற்றும் நிதிய மீதி ரூபா 153,137,696 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) கங்கவட்ட கோரளை பிரதேச சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான காணிக்கு 1997 முதல் மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட வேண்டிய ரூபா 5,999,000 குத்தகை தொகை கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்

04 விடயங்களுக்குரிய ரூபா 30,863,092 கூட்டுத்தொகையான கணக்கு மீதிகள் அதற்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் கூட்டுத்தொகையான ரூபா 44,646,476 ஆன மீதியுடன் ஒப்பிடும் போது ரூபா 13,783,384 இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தண்டப் பணம் மற்றும் மண்டபக் கட்டணங்களின் கூட்டுத்தொகை ரூபா 4,054,215 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நானாவித கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 01 – 07 வரையான காலப்பகுதியில் இருந்து வரும் ரூபா 2,677,038 கூட்டுத்தொகையான 04 கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இருப்பு சீராக்கக் கணக்கில் முன்னைய ஆண்டிலிருந்து இருந்து வரும் ரூபா 13,168,099 ஆன மீதியொன்றை மீளாய்வாண்டின் போதும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 460,500 பெறுமதியான 13 கடன் மீதிகள், ரூபா 230,000 கட்டுநிதி முற்பண மீதி, ரூபா 173,382 இனங்காணப்படாத சம்பள முற்பண மீதி, ரூபா 318,892 ஏனைய கிடைக்க வேண்டிய மீதிகள், ரூபா 2,159,500 கடன்மீதிகள் மற்றும் ரூபா 10,544 விழா முற்பண மீதிகள் உட்பட ரூபா 3,352,818 கூட்டுப் பெறுமதியான மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியிலும் அறவிடப்படாமல் காணப்பட்டது.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதன் காரணமாக ரூபா 9,014,004,656 கூட்டுத்தொகையான கீழே காண்பிக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

| | கணக்கு விடயங்கள் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் | 8,911,604,939 | இச்சொத்துக்களின் உள்ளமை அல்லது பெறுமதி உறுதிப்படுத்து வதற்கு தேவையான நிலையான சொத்துக்கள் பதிவேடு, மெய்மை யாய்வு அறிக்கை அல்லது வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள். |
| (ஆ) | உடன்படிக்கை மீறிய 21 விரிவுரையாளர்களின் பிணைப்பொறுப்பு | 6,866,905 | பிணைப்பொறுப்பு மற்றும் விரிவுரையாளர்களின் ஊழியர் சேமலாப நிதிய இலக்கத்துடனான தகவல்கள். |
| (இ) | 08 பீடங்களுக்குரிய 64 விரிவுரையாளர்களின் ஆய்வுக் கொடுப்பனவுகள் | 8,423,276 | ஆய்வு அறிக்கைகள், சஞ்சிகை குறிப்பேடுகள் மற்றும் ஆய்வுத் தொடர் தொடர்பான தகவல்கள் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கலை பீடத்தின் இருப்புக்கள் | 4,246,133 | நாளதுவரையாக்கப்பட்ட இருப்பு பதிவேடுகள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கை |
| (உ) | வெளிவாரி பரீட்சை பிரிவின் உதவிகள் மூலம் கிடைத்த சொத்துக்கள் | 1,468,164 | பட்டோலைகள் மற்றும் ஏனைய எழுத்துமூல சான்றுகள் |
| (ஊ) | தீர்வு செய்யப்படாத கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் | 5,298,577 | - மேற்படி - |
| (எ) | செலுத்த வேண்டிய பிணை வைப்புக்கள் | 4,709,600 | வைப்புப் பதிவேடு அல்லது பற்றுச்சீட்டுக்கள் |
| (ஏ) | வங்கிக் கணக்கொன்றில் 2010 சனவரி 01 ஆம் திகதி முதல் 2013 மே 30 ஆம் திகதி வரை அகற்றப்பட்ட பணம் | 1,596,783 | காசேடு மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் |
| (ஐ) | மூலதனச் செலவினம் | 4,487,513 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் |
| (ஒ) | நானாவித கடன்பட்டோர் | 65,302,766 | விரிவான பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் |
| | | ----------------- | |
| | | 9,014,004,656 | |
| | | =========== | |

**1.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டம் | |
| 45 ஆம் பிரிவு | வெளித்தரப்பினருடன் உபவேந்தரால் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ஒன்றிணைந்த சுகாதாரக் கல்வி பீடத்திற்குரிய ரூபா 375,000 பெறுமதியுடைய ஆய்வுச் செயற்திட்டமொன்றை செயற் படுத்துவதற்கு தேவையான பிரகாரம் உடன்படிக்கை மேற்கொள்ளாமலும் ஆய்வுச் சபையின் அங்கீகாரமின்றியும் மேற்கொள்ளப் பட்டிருந்தது. |
| (ஆ)பல்கலைக்கழக தாபன விதிக்கோவை | |
| (I) VIII ஆம் அத்தியாயத்தின் 6.1(அ) | பல்கலைக்கழக நிர்வாக சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் இரண்டு விரிவுரை யாளர்கள் தனிப்பட்ட மதியுரையாளர்களாக சேர்க்கப்பட்டு ரூபா 480,000 ஆன மதியுறைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (II) IX ஆம் அத்தியாயத்தின் 3.4, 3.5 மற்றும் 3.6 ஆம் பிரிவு | சேவையில் ஈடுபட்டுள்ளவரால் உழைக்கப்படுகின்ற மேலதிக நேரக் கொடுப்பனவு அவரின் மாதாந்த திரட்டிய சம்பளத்தில் 35 சதவீதத்திற்கு மேற்படக்கூடாத போதிலும், அந்த எல்லையை மிகைத்து மேலவைப் பேரவைக்குரிய 03 பிரிவுகளில் சேவை புரிபவர்களுக்கு ரூபா 23,642,560 கூட்டுத்தொகையான மேலதிக நேரப் படிகள் வழங்கப்பட்டிருந்தன. |

---

| | |
|---|---|
| (III) XX ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணிக்காக வருகை மற்றும் வெளியேறல் பதிவேடொன்று பராமரிக்கப் படாமல் இருந்ததுடன், பதவியணியில் உள்ள 746 பேருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 998,352,538 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்க நிதிப் பிரமாணம் | |
| (I) நிதிப் பிரமாணம் 110 | விவசாய விஞ்ஞான பீடத்தினதும் விஞ்ஞான பீடத்தினதும் இழப்புக்கள் மற்றும் சேதங்களைப் பதிவு செய்யும் ஏடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (II) நிதிப் பிரமாணம் 188 | 03 வங்கிக் கணக்குகளுக்குரிய 2003 முதல் 2012 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 489,625 கூட்டுத்தொகையான 45 தீர்வையாகாத வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (III) நிதிப் பிரமாணம் 212(2)v | சம்பளத்தில் அறவிடப்படாத, 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சம்பள முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 177,651 ஆக இருந்தது. |
| (IV) நிதிப் பிரமாணம் 237(ஆ) | பொறியியல் பீடத்திற்குரிய ரூபா 554,520 ஆன கொள்வனவுகள் இருப்பு பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (V) நிதிப் பிரமாணம் 371 | * பல்கலைக்கழகத்தினால் ரூபா 20,000 எல்லையை மிகைத்து 57 சந்தர்ப்பங்களில் ரூபா 2,418,788 துணைக்கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தன. |

* மிருக வைத்திய பீடத்தினால் ரூபா 354,241 கட்டுநிதி 06 வெளிநிறுவனங்களுக்கும் ஒரு பதவி நிலைத்தரமல்லாத உத்தியோதகத்தர் ஒருவருக்கும் வழங்கப்பட்டிருந்தன.

* ஒன்றிணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தினால் 03 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 65,000 கூட்டுத்தொகையான துணைக் கட்டுநிதி எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் மீண்டும் பணம் தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 37,343,154 கூட்டுத்தொகையான வழங்கல்கள் மற்றும் நானாவித முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(VI) நிதிப் பிரமாணம் 570(ஈ) மற்றும் 571

வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் இரண்டு ஆண்டுகளை மிகைத்திருந்த ரூபா 3,621,630 கூட்டுத்தொகையான நானாவித வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1990 பெப்ரவரி 06 ஆம் திகதி 422 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை

விவசாய விஞ்ஞான பீடத்தின் 24 விரிவுரையாளர்கள் நிர்வாக சபையின் அங்கீகாரமின்றி ரூபா 793,500 கௌரவ சார்ந்த கொடுப்பனவுகளும் ஏனைய கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டிருந்தன.

(உ) 1994 யூன் 14 ஆம் திகதிய 95(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்விக் நிலையத்திற்குரிய 04 உத்தியோகத்தர்களுக்கு 2012 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்காக மாதாந்த சம்பளத்தில் 25 சதவீதம் ரூபா 327,998 பணிப்பாளர் சபை கொடுப்பனவுகளாகவும் பல்

| | |
|---|---|
| | மருத்துவ பீடத்தின் மருத்துவர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 448,300 தொகையான படிகள் திறைசேரி அல்லது அமைச்சின் அங்கீகாரம் இல்லாமல் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஊ) 2000 சனவரி 19 ஆம் திகதிய 380 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் வெவ்வேறு திணைக்களங்களால் வெளி நிறுவனங்களுக்கும் ஆட்களுக்கும் வழங்கப்படும் இரசாயன பரிசோதனை சேவைகளுக்காக மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 6,137,738 கட்டணங்களிலிருந்து சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 3,521,704 பதவியணி படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தன. |
| (எ) 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | உத்தியோகத்தர் ஒருவருக்கு உரித்தான ஆகக்கூடிய இடர் கடன் எல்லை ரூபா 250,000 அல்லது உத்தியோகத்தரின் 10 மாத திரட்டிய சம்பளம் ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியாக இருந்த போதிலும், 08 சந்தர்ப்பங்களில் அந்த எல்லையை மிகைத்து ரூபா 818,645 இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது. |

## 1.4 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொறியியல் பீடத்தின் ஆய்வுச் செயற்திட்டமொன்றிற்காக தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ரூபா 432,000 நிதி வழங்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்ட காலம் 2004 ஏப்ரல் 28 ஆம் திகதி முடிவடைந்திருந்தது. அதன் பின்னர் இச்செயற்திட்டம் 2005 திசெம்பர் 31 ஆம் திகதி முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு 2012 செப்தம்பர் 03 ஆம் திகதி வரை செயற்படுத்தப்பட்டு ரூபா 399,292 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் நாணய கட்டுப்பாட்டாளரின் கடிதத்தின் பிரகாரம் வாய் மற்றும் மூக்கு சத்திர சிகிச்சை செயற்திட்டத்திற்கு உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காக மாத்திரம் வெளிநாட்டு நாணயமாற்றுக் கணக்கிலிருந்து பணத்தை எடுக்க முடியுமான போதும், அதற்கு முரணாக அக் கணக்கிலிருந்து ரூபா 10 மில்லியன் முதலீடு செய்து அரச வங்கியொன்றில் நிலையான வைப்பொன்று திறக்கப்பட்டுள்ளது.

(இ) 2012 ஆம் ஆண்டில் அறவிடப்பட வேண்டிய ரூபா 5,125,335 தொகையான ஊழியர் கடன் தவணை மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக பற்றாக்குறை ரூபா 405,269,886 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 348,897,221 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக பற்றாக்குறை ரூபா 56,372,665 ஆல் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உடன்படிக்கை மீறிய 70 விரிவுரையாளர்கள் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப்பொறுப்பின் பிரகாரம் ரூபா 23,292,536 பெறுமதியான தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் குறித்த வேலை நாளுக்கு முன்னர் அல்லது பின்னைய நாள் சேவைக்கு வருகை தர வேண்டிய போதிலும், 12 சந்தர்ப்பங்களில் மேற்குறித்த நிபந்தனைக்கு முரணாக ரூபா 766,321 கூட்டுத்தொகையான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) தகவல் தொழிநுட்ப நிலையத்தில் மீளாய்வாண்டின் போது குறுகிய கால பாடநெறிகள் நடாத்தப்படாதிருந்த போதும், அப்பாடநெறிகளுக்குரித்தாக ரூபா 10,741,305 தாபன மற்றும் நிர்வாகச் செலவினமாக செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) நன்கொடை பணத்தை முதலீடு செய்து கிடைக்கும் வட்டியிலிருந்து மீளாய்வாண்டிற்காக ரூபா 10,624,012 பெறுமதியான புலமைப் பரிசில்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 2,941,918 பெறுமதியான புலமைப்பரிசில்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. அது வழங்கப்பட வேண்டிய மொத்த புலமைப் பரிசில்களின் எண்ணிக்கையில் 28 சதவீதமாக இருந்தது.

(உ) பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள சர்வதேச ஆய்வு நிலைய செயற்திட்டத்திற்குரிய முன்மொழிவுகளின் பிரகாரம், நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்ய முடியாத போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 1,569,840 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மஹபொல மற்றும் மாணவர் நிதியுதவி என்பன குறித்த ஆண்டில் செலுத்தாமை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து கழிக்கப்பட்ட தொகை குறித்த நிதியங்களுக்கு செலுத்தாமை காரணமாக அக்கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் முறையே ரூபா 5,544,463 மற்றும் ரூபா 16,003,695 ஆன மீதிகள் எஞ்சியிருந்தன.

(ஆ) கலை பீடத்தின் மூலம் நடாத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ள சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி நிதியத்தில் ரூபா 1,058,670 மீதியொன்று பாடநெறி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாமல் ஓராண்டு காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(இ) பல்கலைக்கழகத்தின் தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்வி நிறுவகத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 994,559 பெறுமதியான மிகை இருப்புக்கள், பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத இருப்புக்கள், காலாவதியான இருப்புக்கள், மெதுவாக அசையும் இருப்புக்கள், சேதமடைந்த இருப்புக்கள் என்பன மேவுகை செய்யப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) எவரேனும் ஊழியரிடமிருந்து அரசிற்கு அறவிடப்பட வேண்டிய தொகை ஏதேனும் இருந்தால், அத்தொகையை அவரது ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும், முன்னாள் உதவிப் பதிவாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 230,000 முற்பணத் தொகையை அறவீடு செய்யாமல் 2012 மார்ச் 22 ஆம் திகதி ரூபா 900,700 பணிக்கொடை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கட்டமைப்பு பொறியியல் வடிவமைப்பு திணைக்களத்தின் பிரிவுத் தலைவர், பொறியியல் வடிவமைப்பு நிலையத்தின் மதியுறை சேவை வழங்கல் தொடர்பாக கறுப்பு பட்டியலில் உட்படுத்தப்பட்டிருக்கையிலும் அதற்குப் பின்னரும் அவருக்கு மதியுறை சேவை வழங்கலை ஒப்படைத்து 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சேவைகள் வழங்கியமைக்காக ரூபா 356,500 ஆன மதியுறைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மதியுறை சேவைகள் வழங்குவதன் மூலம் நிறுவகத்திற்கு கிடைக்கும் வருமானத்தில் 60 சதவீதத்தை திறைசேரியின் அந்நடவடிக்கைகளுக்காக பேணப்படுகின்ற நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2007 முதல் 2012 ஆம் ஆண்டு வரை கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 110,264,884 மதியுறைக் கட்டணங்களாக ரூபா 66,158,930 ஐ திறைசேரியின் குறித்த கணக்கிற்கு செலவு வைக்காமல் பொறியியல் வடிவமைப்பு நிலையக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆய்வு நடவடிக்கைகளுக்காக கிடைக்கும் நிதியத்தை உரிய ஆய்வு நடவடிக்கைகளுக்காக மாத்திரம் ஈடுபடுத்த வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 39,000,000 ஆன ஆய்வு மானியங்களைப் பயன்படுத்தி முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் ரூபா 8,000,000 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) விரிவுரையாளர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறையின் பிரகாரம் அந்த பதவிகளுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட திகதி முதல் 08 வருடங்களுக்குள் பட்டப்பின் படிப்பு தகைமையை பூர்த்தி செய்ய வேண்டிய போதிலும், சமூக விஞ்ஞான திணைக்களத்தின் விரிவுரையாளர் ஒருவரால் 2001 ஏப்ரல் 09 ஆம் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு வரை அத்தகைமையைப் பூர்த்தி செய்யாதிருக்கையில் அவரின் சேவையை முடிவுறுத்தாமல் 2010 ஆம்

ஆண்டின் போது சிரேஷ்ட விரிவுரையாளர் II ஆம் தரத்திற்கு உயர்வு வழங்கி அத்திகதியிலிருந்து சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 5,249,271 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்தின் பயிர்கள் விஞ்ஞானத் திணைக்களத்தின் பேராசிரியர் ஒருவர் 2004 மார்ச் 01 ஆம் திகதி முதல் உயர் கல்வி அமைச்சின் பட்டதாரி அபேட்சகர் கல்வியின் தரம் மற்றும் அதற்குரியவைகளை மேம்படுத்துவதற்குமான செயற்திட்டத்தின் கீழ் சேவை செய்யும் பொருட்டு விடுவிக்கப்பட்டிருந்தார். அவ்வாறு விடுவிக்கப்பட்டிருந்த காலப்பகுதி 02 ஆண்டுகளுக்கு மேற்படக் கூடாதததுடன், அக்காலப்பகுதி முடிவில் மீண்டும் தமது நிரந்தர பதவிக்கு வரவேண்டிய போதிலும், பேராசிரியர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 3 1/2 ஆண்டுகளுக்கு மேலாக முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் அச்செயற்திட்டத்தில் சேவை புரிந்திருந்தார்.

(எ) விவசாய விஞ்ஞான பீடத்தின் சர்வதேச அணுசக்தி ஆராய்ச்சி அதிகாரசபை என்ற பெயரில் செயற்திட்டத்திற்காக பல்கலைக்கழகத்தின் ஆய்வுக் குழுவினதும் நிதிக் குழுவினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2005 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை செயற்திட்டத்திற்கு ரூபா 5,197,578 நிதி கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அதற்காக ஒவ்வொரு காலப்பகுதிக்குமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்தின் கீழ் அங்கீகாரமொன்று இல்லாமல் வெளிநாட்டு பயணமொன்றிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 108,800 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஏ) பல்கலைக்கழகத்தில் சேவை புரிகின்ற உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழித்தேர்ச்சிக் கொடுப்பனவு உரித்தற்ற போதிலும், 1994 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அவர்களுக்கு ரூபா 39,716,603 கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 3.4 பயன்படுத்தப்படாத குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாக 05 வதிவற்ற வங்கிக் கணக்குகள் காணப்பட்டதுடன், அதன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,890,526 ஆக இருந்த போதிலும், 2003 முதல் 2012 ஆம் ஆண்டு வரை அக்கணக்குகள் மூலம் எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) ஆய்வுகளை மேம்படுத்தல் மற்றும் உபகரணப் பராமரிப்பு நிதியக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 765,846 தொகையான மீதியொன்று காணப்பட்டதுடன், ரூபா 39,610,428 கூட்டுத்தொகையான 167 பழைய ஆய்வு மற்றும் உபகரண மீதிகள் காணப்பட்டதுடன், அக் கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் எவ்வித ஆய்வு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கல்வி விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ள விரிவுரையாளர்களினால் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்ட ரூபா 129,837,205 ஆன பிணைமுறித் தொகை, குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக பயன்படுத்தாமல் 10 நிதியக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்டது.

(ஈ) இலங்கை விவசாய ஆராய்ச்சி திட்டத்தின் கீழ், விவசாய பீடத்திற்கு 2012 – 2014 வரையான காலப்பகுதியில் 06 ஆய்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு ரூபா 2.61 மில்லியன் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அதில் ரூபா 1.3 மில்லியன் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2009 முதல் 2011 வரையான காலப்பகுதியில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் பொருட்டு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 1 மில்லியன் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஒன்றிணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்திற்குரிய ரூபா 1,408,712 பெறுமதியான இரசாயன பொருட்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன், ரூபா 510,120 பெறுமதியான 48 இரசாயனப் பொருள் உருப்படிகள் மெதுவாக விநியோகிக்கப்பட்டு வந்தன.

(ஊ) ஒன்றிணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தின் இரசாயனத் திணைக்களத்தின் இரசாயனப் பிரிவிற்காக மீளாய்வாண்டின் நிதிஏற்பாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 938,364 பெறுமதியான Auto Clave 150 L என்ற உபகரணம் 2014 நவம்பர் மாதம் வரையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(எ) விஞ்ஞான பீடத்தின் விஞ்ஞான கல்விப் பிரிவின் மூலம் அச்சிடப்பட்ட ரூபா 1,534,255 பெறுமதியான 6957 புத்தகங்கள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) பல் மருத்துவ விஞ்ஞான பீடத்தின் கீழுள்ள 04 திணைக்களங்களால் தரவு சேவைகள் வழங்குவதற்குரிய நோயாளர்களிடம் 2003 மார்ச் 15 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட்ட ரூபா 2,259,121 தொகையொன்றை குறிப்பாக கூறப்பட்ட செயற்பாட்டிற்காக பயன்படுத்தாமல் பீடத்திற்குரிய வங்கிக் கணக்கொன்றில் வைத்திருக்கப்பட்டது.

(ஐ) அரச வங்கியொன்றின் சேமிப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டிருந்த மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 1,734,858 தொகையான கலைப் பிரிவிற்குரிய பணத்தை பயனுள்ள முதலீட்டில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) விபரக் குறிப்புக்களை தீர்மானிக்காமல் வழங்குனரின் விபரக் குறிப்புக்களின் பிரகாரம் மதிப்பீடு செய்து ரூபா 4,227,440 இற்கு உயிரியல் கழிவுப் பொருட்களை எரிக்கும் இயந்திரமொன்று 2011 நவம்பர் 30 ஆம் திகதி அவசரத் தேவையெனக் கருதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், இவ்வியந்திரம் மீளாய்வாண்டின் நவம்பர் 30 திகதி வரையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் இருந்தது.

(ஓ) முறையான மதிப்பீடு மற்றும் தேவைப்பாடு ஒன்று இல்லாமல் பல் மருத்துவ விஞ்ஞான பீடத்தின் தகவல் தயாரிக்கும் திணைக்களம், இருப்புக்களை கட்டளையிட்டதன் காரணமாக ரூபா 1,508,557 ஆன 21 இரசாயனப் பொருள் உருப்படிகள் 06 மாதங்கள் முதல் 08 ஆண்டுகள் வரையிலும் ரூபா 597,861 பெறுமதியான 10 நுகர்வுப் பொருள் இருப்பு உருப்படிகளும் 01 ஆண்டு முதல் 11 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டிருந்தன.

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தின் நீர் பம்பியறைக்கு 30 ஆண்டுகளுக்கு முன்னர் மின் நிலைமாற்றியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 1,552,910 செலவு செய்யப்பட்டு மின் நிலைமாற்றியொன்று பொருத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒன்றிணைந்த சுகாதார சேவைகள் பீடத்தின் மாணவர்களுக்கு சிகிச்சை பயிற்சிகளை வழங்கும் பொருட்டு பேராதனை, கண்டி அல்லது கம்பளை ஆகய போதனா வைத்தியசாலைகளுக்கு தொடர்புபடுத்தாமல் குருணாகல் பெரியாஸ்பத்திரிக்கு மாணவர்களை அழைத்துச் செல்வதற்காக மீளாய்வாண்டின் போது தனியார் பஸ் வண்டிக் கட்டணமாக ரூபா 528,192 தொகயும் சாரதி உதவியாளர்களினதும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு பிரயாணச் செலவினத்திற்காக ரூபா 243,335 தொகையுமாக ரூபா 771,527 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) பாதுகாப்பு சேவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள சேவை ஒழுங்கு நேர அட்டவணையின் பிரகாரம் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் ஆகக் குறைந்தது மாதமொன்றுக்கு 192 மணித்தியாலங்கள் சேவையிலீடுபட வேண்டிய போதிலும், அவ்வாறு மாதமொன்றுக்கு ஆகக் குறைந்த சேவை புரிய வேண்டிய காலம் சேவை புரியாமல் மீளாய்வாண்டின் செப்தெம்பர், ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் மாத்திரம் ரூபா 774,262 கூட்டுமொத்த தொகையொன்று மேலதிக நேரமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஒன்றிணைந்த சுகாதார சேவைகள் பீடத்திற்காக கே.வீ.ஏ.400 மின் நிலைமாற்றியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு 2011 ஆம் ஆண்டின் இறுதியின் போது ரூபா 4,143,413 மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கையில், அத்தொகைக்கு கொள்வனவு செய்யாமல் குறித்த மின் நிலைமாற்றியைக் கொள்வனவு செய்வதைத் தாமதப்படுத்தி பின்னர் ரூபா 6,008,676 இற்கு நிலைமைாற்றியை கொள்வனவு செய்தமையால் ரூபா 1,865,263 நிதிசார் நட்டமொன்று இடம்பெற்றிருந்ததுடன், அது 2013 யூலை மாதம் வரையில் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல் மருத்துவ விஞ்ஞான பீடத்தின் தரவுகள் தயாரிக்கும் திணைக்களத்தின் பொருள் இருப்பு மாதிரி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது ரூபா 695,627 பெறுமதியான இருப்புக்கள் காலாவதியாகியிருந்தன.

(ஆ) பொறியியல் பீடத்தின் பீடாதிபதி அலுவலகத்தினால் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 373,719 ஆன பொருள் உருப்படிகள் 06 காணாமல் போயிருந்தன.

(இ) பல்கலைக ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்காக பங்களிப்புத் தொகை முறையாக அனுப்பாததன் காரணமாக ரூபா 975,965 தண்டப் பணமாக செலுத்த நேர்ந்திருந்தது.

(ஈ) தகவல் தொழிநுட்ப நிலையத்தின் உத்தியோகத்தர்களுக்காக சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தாமை காரணமாக ரூபா 40,182 தண்டப் பணமாகவும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையை செலுத்தாமை காரணமாக ரூபா 224,008 தண்டப் பணமாகவும் செலுத்துவதற்கு நேர்ந்திருந்ததுடன், அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2001 முதல் 2012 ஆம் ஆண்டு வரை இருந்து வரும் உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 6,240,416 பெறுமதியான 24 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்திற்கு மாநாட்டு மண்டபமொன்றை நிர்மாணிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின் போது அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு முற்பணமாக ரூபா 500,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2013 மார்ச் 31 ஆம் திகதி வரையில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. முற்பணத் தொகை செலுத்தப்பட்டு 04 ஆண்டுகள் தாமதமாகியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) வழங்கப்பட்ட 6 ஒப்பந்தங்களுக்காக வேலை தொடக்க முற்பணமாக ரூபா 12,250,740 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ் ஒப்பந்தங்களின் உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் 18 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையான தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 4,552,272 தொகையான வேலை தொடக்க முற்பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு சேவைக்கு தனியார் பிரிவு காப்பாளர்கள் 116 உம் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர்கள் 71 உமாக 187 பாதுகாப்பு பரிசோதகர்களும் காப்பாளர்களும் சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 71 பேர் சேவையீடுபடுத்தப்பட்டிருக்கையில் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே 8,664,805 தொகை, ரூபா 9,918,343 தொகை ரூபா 9,508,437 தொகையாக பாதுகாப்பு சேவைக்காக மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தாமதத்தினால் பிற்போடப்பட்ட வேலைகளுக்காக மேலதிக நேர கொடுப்பனவுகள் அங்கீகரிக்க முடியாத போதிலும், உத்தியோகத்தர்களின் கடமைப் பட்டியலில் குறிப்பிட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 62,327,455 மேலதிக நேரமாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2101 ஆக இருந்ததுடன், சம்பளத்திற்காக ரூபா 52,200,000 தொகை ஆண்டில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உள்ளவாறான பதவியணியினர் 956 இருந்ததுடன் 1145 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தமையால் மீளாய்வாண்டின் போது அவ்வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளாமல் உத்தியோகத்தர்களை மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்தியதால் ரூபா 62,327,455 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கல்விசார் பதவியணியின் 64 பதவிகளுக்குரிய 208 உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டன.

(உ) கல்விசார் பதவியணியின் 746 உறுப்பினர்கள் 2012 யூலை முதல் செப்தம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதன் காரணமாக எவ்வித சேவையையும் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 52,326,817 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இடம்பெறாத சர்வதேச ஆய்வு நிலையத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள மூன்று உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டிற்காக ரூபா மீளாய்வாண்டில் ரூபா 1,289,150 சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) விவசாய பீடத்தின் மிருக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்களை சேர்க்கும் நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்காத வகையில் விரிவுரையாளர் ஒருவரைச் சேர்த்து அவருக்கு 2002 முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா ரூபா 6,658,935 செலுத்தப்பட்டிருந்தது. இவ்விரிவுரையாளருக்கு கலாநிதி பட்டத்தை பின்பற்றுவதற்காக 2003 பெப்ரவரி 05 ஆம் திகதி முதல் 39 மாத காலப்பகுதியில் வெளிநாட்டு கல்வி விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. 2013 பெப்ரவரி வரையிலும் கலாநிதி பட்டத்தை பூர்த்தி செய்திருக்காததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,057,165 பிணைப்பொறுப்பினை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கலைப் பீடம், பல் மருத்துவ விஞ்ஞான பீடம் மற்றும் ஒன்றினைந்த சுகாதார மருத்துவ பீடம் என்பவற்றிற்காக அங்கீகரிக்கப்பட்ட விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 50 ஆகக் காணப்படுகையில் வெற்றிடங்களை நிரப்பாமல் வெளி மற்றும் தற்காலிக விரிவுரையாளர்கள் 172 பேரை சேர்த்து ரூபா 11,672,209 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டுத்திட்டம்

கூட்டுத்திட்டத்தில் பாதீடு செய்யப்பட்ட மூலதனச் செலவினம் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 383,490,000 ஆன மூலதனச் செலவினங்கள் கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

(அ) கூட்டுத்திட்டத்திற்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 09 செயற்பாடுகளுக்குரிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 நிர்வாக சபைக் கூட்டங்கள்**

மீளாய்வாண்டில் 11 தடவை நிர்வாக சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம், செயற்திறனை மதிப்பிடுதல் மற்றும் வழிகாட்டுதல் என்பவற்றிற்கான உரிய அறிக்கைகள் மற்றும் தகவல்கள் என்பன நிர்வாக சபைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**4.4 கொள்வனவுத் திட்டம்**

பல் மருத்துவ விஞ்ஞான பீடத்திற்கு மீளாய்வாண்டில் ரூபா 15,472,301 மற்றும் கலைப் பீடத்திற்காக ரூபா 2,029,209 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2006 தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 வழிகாட்டியின் பிரகாரம் அதற்குரிய கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வருடாந்த பாதீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானங்கள் மற்றும் செலவினங்கள் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவினங்கள் என்பவற்றுடன் ஒப்பிடும் போது கீழே காட்டப்பட்டுள்ள விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு சிறந்த நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) 18 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாடுகளின் மிகைகளின் கூட்டுத்தொகை ரூபா 182,082,191 ஆக இருந்ததுடன், அது 30 சதவீத முதல் 437 சதவீதமான விலகலைக் கொண்டிருந்தன.

(ii) 16 செலவின விடயங்களுக்கு மிகை ஒதுக்கீடு ரூபா 66,629,928 ஆக இருந்ததுடன், அது 21 சதவீதத்திலிருந்து 99 சதவீதத்திற்கு இடைப்பட்ட விலகல் காணப்பட்டன.

(iii) மதிப்பீட்டில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாத 08 செலவின விடயங்களுக்கு ரூபா 3,673,360 ஆன செலவினம் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்ததுடன், 04 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,500,000 ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(iv) 07 வருமான விடயங்களுக்குரிய ரூபா 34,137,379 வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரைவு வருடாந்த பாதீட்டிற்கு நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் நிர்வாக சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் பாதீட்டிற்கு 2012 யூன் 09 ஆம் திகதி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான சேகரிப்பும் கணக்கீடும்
(ஆ) முற்பண மீதிகளை தீர்வு செய்தல்
(இ) இருப்புக் கட்டுபாடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) ஆய்வு மானியங்களின் பயன்பாடு
(ஊ) நிதியப் பயன்பாடு
(எ) மனித வள முகாமை
(ஏ) கொள்வனவுச் செயற்திட்டம்
(ஐ) ஊழியர் கடன் நிர்வாகம்
(ஒ) ஒப்பந்த நிர்வாகம்